# இன்னா நாற்பதில் யாப்பு மரபுகள்

***பா. ஜெயபுனிதாராஜேஸ்வரி***
பதிவு எண்: 22112014022006
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,தமிழாய்வு மையம்
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அங்கீகாரம் பெற்றது
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா

***முனைவர் ச. மல்லிகா***
நெறியாளர் & இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை & தமிழாய்வு மையம்
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6439

**ஆய்வுச்சுருக்கம்**

*உலகில் உயர்தனிச் செம்மொழியாக தமிழ் விளங்குகிறது. அம்மொழியின் தொன்மையையும் தமிழ் இலக்கியத்தின் பழைமையையும் எடுத்துக்காட்டும் சான்றாகத் தொல்காப்பியம் திகழ்கிறது. நாடக வழக்கினும், உலகியல் வழக்கினும், பாடல் சான்ற புலநெறி வழக்கம் என்று தமக்கு முற்பட்ட இலக்கிய மரபைக் குறிப்பிடுவதன் வழியாக தொல்காப்பியத்திற்கு முன் இலக்கண நூல்கள் இருந்துள்ளன என்பதை அறிய முடிகின்றது. இவற்றின் மரபை பின்பற்றி இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. பிறமொழிகளில் எழுத்திற்கும், சொல்லிற்கும் மட்டும் இலக்கணம் அமைந்துள்ளது. தமிழில் எழுத்திற்கும், சொல்லிற்கும், இலக்கியத்தில் அமையும் பொருளுக்கும் ஏற்ற இலக்கண நூலாக தொல்காப்பியம் விளங்குவது தமிழ்மொழியில் அமைந்த தனிப்பெரும் சிறப்பு. பொருளதிகாரத்தில் உள்ள செய்யுளியல் யாப்பு பற்றி எடுத்துரைக்கிறது. அவர் வகுத்துள்ள யாப்பு இலக்கணக் கூறுகள், பதினெண்கீழ்கணக்கு நூல்களில் ஒன்றான இன்னா நாற்பதில் பொருந்துகின்றன என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

**முன்னுரை**

பதினென்கீழ்கணக்கு நூல்களில் பதினொரு நூல்கள் நீதி பற்றியன. அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருளையும் கொண்டு வெண்பாக்களினால் ஆன நூல்களைக் கீழ்கணக்கு எனப் பன்னிரு பாட்டியல் இலக்கணம் வகுக்கிறது. நீதியைச் சொல்வதற்கு ஏற்ற எளிமையான யாப்பு வடிவம் வெண்பா. இருமுறை படித்தால் எளிதாக மனதில் பதியும்வெண்பாவால் பாடப்பட்டது இன்னா நாற்பது. இதில் அமைந்துள்ள யாப்பு மரபைக் கண்டறிவதாக இவ்வாய்வு கட்டுரை அமைகிறது.

### யாப்பு மரபு

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று பகுதிகளை உடையது. பொருளிலக்கணத்தில் உள்ள செய்யுளியலில் யாப்பிலக்கணம் உள்ளது. உவமையியலில் அணியிலக்கணம் உள்ளது. தொல்காப்பியம் ஐந்திலக்கணம் பற்றி பேசுவதால் ஐந்திறம் நிறைந்த தொல்காப்பியம் என அழைக்கப்படுகிறது. பின்னாளில் யாப்பிலக்கணத்தை மட்டும் கூறக்கூடிய தனி இலக்கண நூல்கள் யாப் பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை தோன்றின. யாப்பிலக்கண மரபிலிருந்து பாட்டியல் என்ற தனி இலக்கண நூல் வளர்ச்சியுற்றன.

தொல்காப்பியர் யாப்பு என்பதைச் செய்யுள் உறுப்புகளில் ஒன்றாகக் கூறுகின்றார். இவர் யாப்பு என்பதற்கான வரையறையை,

**"எழுத்து முதலா ஈண்டிய அடியிற்**
**குறித்த பொருளை முடிய நாட்டல்**
**யாப்பென மொழிப யாப்பறி புலவர்"[1]**

என்கிறார். யாப்பு என்பது எழுத்து, அசை, சீர், அடி என்ற உறுப்பை மட்டும் கொள்ளாமல் பொருளமைப்பையும் சேர்த்து யாப்பு எனக் கூறுகிறார்.

தொல்காப்பியச் செய்யுளியலில் உள்ள முதல் நூற்பா மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி, யாப்பு, மரபு, தூக்கு, தொடை, நோக்கு, பா, அளவியல், திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள், துறை, மாட்டு, வண்ணம் என்று 26 உறுப்புகளை முதலிலும் அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்ற 8 வனப்புகளை பின்னரும் எடுத்துரைக்கிறது. தொல்காப்பியம் கூறுகின்ற 34 உறுப்புகளில் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்ற ஐந்து உறுப்புகளை பற்றியும் தொல்காப்பியம் உறுப்பாக கூறாமல் இலக்கணமாக கூறுகின்ற தளை பற்றியும் பின்னர் தோன்றிய யாப்பிலக்கணங்கள் எடுத்துரைக்கின்றன.

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, தூக்கு தொல்காப்பியத்தில் செய்யுள் உறுப்புகளாகவும் பின்னர் தோன்றிய யாப்பிலக்கணங்களில் பாவுக்கு அடிப்படையாக அமையும் யாப்பு உறுப்புகளாக அமைந்துள்ளன. இவை முதன்மை உறுப்புகளாகச் சுட்டப் படுகின்றன. இவற்றுள் தூக்கு என்பதை தனி உறுப்பாக தொல்காப்பியம் கூறுகிறது. காரிகை நூல் பாக்களை விளக்குமிடங்களில் அந்தந்த பாக்களுக்குரிய ஓசையாக (தூக்கு) எடுத்துரைக்கிறது. வண்ணம், வனப்பினை தொல்காப்பியர் செய்யுள் உறுப்புகளாகக் கூறுகிறார். பிற்கால யாப்பியலார் இவ்வுறுப்புகளை ஒழிபியலில் கூறுகிறார்கள். இவை இரண்டாம் நிலை உறுப்புகளாக கூறப்படுகிறது.

### இன்னா நாற்பது

சங்கம் மருவிய காலத்தைச் சார்ந்த பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று இன்னா நாற்பது. இதனை இயற்றியவர் கபிலர். ஒரு கடவுள் வாழ்த்துப் பாடல், நாற்பது பாடல்களையும் கொண்டு இந்நூல் திகழ்கிறது. இன்னா நாற்பது கி.பி. நான்காம் நூற்றாண்டைச் சார்ந்தது. உலகத்தில் கூடாத செயல்கள் துன்பம் தருகின்ற செயல்களைப் பற்றி கூறுகின்ற நீதி நூல். ஒவ்வொரு பாடலிலும் நான்கு இன்னாத கருத்துக்கள் அமைந்துள்ளன. ஒவ்வொரு கருத்துக்களையும் இன்னா என எடுத்துக் கூறுவதன் வழியாக இன்னா நாற்பது எனப் பெயர் பெற்றுத் திகழ்கிறது. இந்நூலில் உள்ள நாற்பது பாடல்கள் யாப்பிலக்கண மரபுகளுக்கு உட்பட்டுள்ளன. இந்நூல் எளிய யாப்பு வடிவமான வெண்பாவில் அமைந்துள்ளது.

### யாப்பிலக்கண உறுப்பும் செய்யுளியலும்

யாப்பிலக்கணம் செய்யுள் எழுதுவதற்குரிய இலக்கணத்தை மொழிகின்றது. யாத்தல் என்னும் சொல் கட்டுதல் என்ற பொருளை உடையது. எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை உறுப்புகளை ஒரு சேரக்கட்டி

அமைப்பது என்னும் பொருளில் செய்யுள் இடம்பெறுகின்றது.உறுப்பியலில் செய்யுள் உறுப்புகளின் இலக்கணம் உள்ளன. செய்யுளியலில் பா, பாவினம் என்ற இரு வகைகள் அமைந்துள்ளன.

பா: வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என நான்கு வகை பாக்களை கூறி அவற்றிற்குரிய இலக்கணம் எடுத்து ரைக்கப்படுகிறது.

பாவினம்: தாழிசை, துறை, விருத்தம் என மூன்றாக வருகின்றன.

உறுப்பியலில் கூறப்படுகின்ற அறுவகை உறுப்புகளில் எழுத்து, அசை, தொடை என்ற மூன்றும் அனைத்துப் பாக்களுக்கும், பாவினங்களுக்கும் பொதுவானவை. சீர், தளை, அடி என்ற மூன்று உறுப்பினைக் கொண்டு பா வேறுபாடு அமைகிறது.

### எழுத்து அமைப்பு

தமிழ் இலக்கண நூல்களில் எழுத்து என்ற சொல் மொழியில் வழங்கும் ஒலிகளைக் குறிக்கவும் அவ்வொலிகளுக்குரிய வரிவடிவத்தை குறிக்கவும் பயன்படுகின்றது.

**“எழுதப்படுதலின் எழுத்தே அவ்வெழுத்து**
**அசைத்திசை கோடலின் அசையே”[2]**

என்று காரிகையில் கூறப்பட்டுள்ளன. உயிர் எழுத்து 12, மெய்யெழுத்து 18, உயிர்மெய் எழுத்து 216, ஆய்த எழுத்து 1 இந்த இருநூற்று நாற்பத்தேழு எழுத்துகளும் தமிழில் வரிவடிவமாகவும், ஒலிவடிவமாகவும் இருக்கின்றன. மெய்யெழுத்து 18, ஆய்தம் 1 இந்த பத்தொன்பதும் ஒற்று என்று எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறில் 95, நெடில் 133, ஒற்று 19, என்ற 247 எழுத்துக்களும் யாப்பிலக்கணத்தில் குறில், நெடில், ஒற்று என்ற மூன்று வகையில் அடங்குகின்றன.

செய்யுட்களில் எழுத்துக்கள் அளபெடுத்தும் குறுகியும் ஒலிக்கின்றன. குறில், நெடில், ஒற்று எழுத்துகள் இன்னா நாற்பது பாடல்களில் பயின்று வந்துள்ளன. தமிழிலுள்ள எழுத்து களில் ஆய்த எழுத்து, ஔகாரம்(குறுக்கம்), அளபெடை இதில் இடம்பெறவில்லை. ஐகாரம் பாடல்களில் பயின்று வந்துள்ளன.

### அசை

அசை என்பது மொழியின் இயக்கம். பொருள் நோக்காமல் ஒரு சொல்லைப் பிரித்தால் அந்த சொல் முதலில் அசைகளாகப் பிரிகிறது. பின் நுட்பமாக பிரித்தால் எழுத்துகளால் பிரிகிறது. இவ்வகையில் தொல்காப்பியர் அசையினை,

**“குறிலே நெடிலே குறிலிணை குறில்நெடில்**
**ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி**
**நேரும் நிரையும் மென்றிசிற் பெயரே”[3]**

என்றும்,

**“இருவகை உகரமோ டியந்தவை வரினே**
**நேர்பு நிரைபும் ஆகும் என்ப**
**குறிலிணை உகரம் அல்வழியான”[4]**

என்றும் எடுத்துரைக்கிறார். நேர், நிரை, நேர்பு, நிரைபு என அசையினை நான்காக பாகுபடுத்தி கூறுகிறார். இன்னா நாற்பதில் உள்ள பாடல்களில் நான்கு அசைகளும் பயின்று வருகின்றன.

**“கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்த லின்னா”[5]**

என்ற அடியில், கொடுங்-கோல்: நிரை-நேர், மற-மன்-னர்: நிரை-நேர்-நேர் என்று நேர் அசையும் நிரை அசையும் இடம் பெற்றுள்ளன.

**“தடுமாறி வாழ்த லுயிர்க்கு”[6]**

என்ற அடியில் லுயிர்க்-கு: நிரைபு பயின்று வந்துள்ளது.

**“நயமில் மனத்தவர் நட்பு”[7]**

என்ற அடியில் நட்-பு: நேர்பு பயின்று வந்துள்ளது.

அசைக்குரிய வாய்ப்பாடாக யாப்பிலக்கண நூலில்,

**“குறிலே நெடிலே குறிலிணை குறினெடில்**
**தனித்து மொற்றெடுத்தும் வனரின்நேர் நிரையெனும்**
**அசையாம் அவைநாள் மலர்வாய் பாடே”[8]**

என்று நேர் அசைக்கு நாள் என்றும், நிரையசைக்கு மலர் என்றும் வாய்பாடு கூறுகின்றது.

"தனிக்குறில்(க) ஒழிந்த நேரசை எழுத்துகள் மூன்றனோடும் "குசுடுதுபுறு" என்னும் வல்லின உகரம் சேர்த்தல் காசு எனப்படும். நிரையசை எழுத்துகள் நான்கனோடும் "குசுடுதுபுறு" சேர்த்தல் பிறப்பு எனப்படும்"[9] என்று யாப்பிலக்கண நூல் எடுத்தியம்புகிறது. இன்னா நாற்பதில் உள்ள நாற்பது பாடல்களில், ஒவ்வொரு பாடலின் இறுதிச்சொல்லில் அசையானது,

நேர் (3)- சொல், சொல், ஊர்

நிரை (26) - விடின், உலகு, செயல், வினை, னுரை, பரிப்பு, புரிவு, புகழ், மனை, கடை, படல், விடல், வழி, னுரை, தவம், செயல், புகழ், கொளல், மறை, மதர், பகை, கெடல், எனல், கொளல், வினை, விடல்,

நேர்பு (5) - நட்பு, நட்பு, சூது, கொட்பு, நட்பு

நிரைபு (6) - உயிர்க்கு, விழைவு, கணக்கு, தொடர்பு, வுழவு, தொடர்பு

என்ற முறையில் நாள் என்னும் வாய்பாட்டை கொண்டு 3 பாடல்கள், மலர் என்னும் வாய்பாட்டை கொண்டு 26 பாடல்கள், காசு என்னும் வாய்பாட்டை கொண்டு 5 பாடல்கள், பிறப்பு என்னும் வாய்பாட்டை கொண்டு 7 பாடல்களும் அமைந்துள்ளன.

### சீர் அமைப்பு

எழுத்துகள் இணைந்து அசைகளும், அசைகள் இணைந்து சீர்களும் உருவாகின்றன.

**"ஈரசை கொண்டு மூவசை புணர்த்துஞ்
சீரியைந் திற்றது சீரெனப் படுமே'[10]**

என்று தொல்காப்பியர் சீர் பற்றி எடுத்து ரைக்கிறார். சீர்கள் ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என்று நான்காகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஓரசைச்சீர் என்பது அசைச்சீர் என வழங்கப்படுகிறது. ஓரசைச்சீர் இரண்டாகவும், ஈரசைச்சீர் நான்காகவும், மூவசைச்சீர் எட்டாகவும். நாலசைச்சீர் பதினாறாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. இன்னா நாற்பதில் உள்ள பாடல்களில் சீர் அமைப்பானது, வினை, உலகு, சொல் என்ற சொற்களில் ஓரசைச்சீராக (நேர், நிரை) அமைந்துள்ளன. பாடல் வரிகளில், "மாற்ற மறியா னுரை" என்ற ஏழாவது பாடலில் மாற்-ற: நேர்-நேர், மறி-யா: நிரை-நேர் என்றும், "நயமில் மனத்தவர் நட்பு" என்ற எட்டாவது பாடலில் மனத்-தவர்: நிரை-நிரை என்று அமைந்துள்ளதன் வழியாக ஈரசைச்சீர்கள் இடம் பெற்றுள்ளதை அறிய முடிகின்றது.

"எருதி லுலவர்க்குப் போகீரம் இன்னா" என்ற நான்காவது பாடலில், லுல-வர்க்-குப்: நிரை-நேர்-நேர் என்றும், "கொடுக்கும் பொருளில்லான் வள்ளன்மை யின்னா" என்ற முப்பத்தி ஒன்பதாவது பாடலில் பொ-ருளில்-லான்: நேர்-நிரை-நேர் என்றும் சீர்கள் அமைந்துள்ளன. இதன் வழியாக மூவசைச்சீர்கள் இன்னா நாற்பதில் இடம் பெற்றுள்ளன என்பது புலனாகிறது.

இன்னா நாற்பதில் உள்ள நாற்பது பாடல்களில் அசையானது, ஓரசை ச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர்கள் மட்டும் இடம் பெற்றுள்ளன. நாலசைச்சீர் பாடல்களில் இடம் பெறவில்லை. நாலசைச்சீர்களைக் கொண்ட சொற்கள் (அசை) இன்னா நாற்பதில் இல்லை என்பது தெளிவாகப் புலனாகிறது.

### இன்னா நாற்பதின் தளை அமைப்பு

சீர்கள் ஒன்றோடொன்று கூடும் கூட்டத்திற்குத் தளை என்று பெயர். தளைதல்- கட்டுதல் இரண்டு சீர்களை ஒன்றாகத் தளைதல் என்று பொருள் கொள்ளப்படுகிறது. தொல்காப்பியம் தளையைத் தனி உறுப்பாகக் கொள்ளவில்லை. தளை பற்றிய கருத்துகள் தொல்காப்பியத்தில் உண்டு. தொல்காப்பியத்தில் ஆசிரியத்தளை, வெண்டளை, கலித்தளை மட்டும் காணப்படுகின்றன. யாப்பிலக்கணம் தளையினை நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை,

கலித்தளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை என ஏழாகப் பிரிக்கின்றது. இன்னா நாற்பதில் "கள்ளில்லா மூதூர் களிகட்கு நன்கின்னா" என்ற ஒன்பதாவது பாடல் வரியில்,

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| கள்ளில்லா | மூதூர் | களிகட்கு | நன்கின்னா |
| நேர் நேர் நேர் | நேர் நேர் | நிரை நேர் நேர் | நேர் நேர் நேர் |
| தேமாங்காய் | தேமா | புளிமாங்காய் | தேமாங்காய் |

காய் முன் நேர் - வெண்சீர் வெண்டளை மா முன் நிரை-இயற்சீர் வெண்டளை அமைந்துள்ளன. "புல்லார் புரவி மணியின்றி யுர்வின்னா" என்ற பதினைந்தாம் பாடல் வரியில்,

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| புல்லார் | புரவி | மணியின்றி | யுர்வின்னா |
| நேர் நேர் | நிரை நேர் | நிரை நேர் நேர் | நேர் நேர் நேர் |
| தேமா | புளிமா | புளிமாங்காய் | தேமாங்காய் |

மாமுன் நிரை-இயற்சீர் வெண்டளை, காய் முன் நேர்-வெண்சீர் வெண்டளை அமைந்துள்ளன.

இன்னா நாற்பதில் உள்ள பாடல்கள் வெண்சீர் வெண்டளையும், இயற்சீர் வெண்டளையும் பெற்றுத் திகழ்கின்றன. இதன் வழியாக வெண்பாவிற்குரிய தளைகளான வெண்சீர் வெண்டளையும், இயற்சீர் வெண்டளையும் இன்னா நாற்பதில் இடம் பெற்றுள்ளன என்பது தெளிவாகின்றது.

## அடி அமைப்பு

பாக்களில் சீர்கள் தொடர்ந்து வருவது அடி எனப்படுகிறது. அடி அமைப்பினை,

**"குறளிருசீரடி சிந்துமுச்சீரடி நாலொருசீர்**
**அறைதரு காலை அளவொடு நேரடி"[11]**

என யாப்பருங்கலக்காரிகை எடுத்துரைக்கின்றது.

**"இருசீர் குறளடி முச்சீர் சிந்தடி**
**நாற்சீர் அளவடி ஐஞ்சீா நெடிலடி"[12]**

என்று யாப்பிலக்கணம் அடி அமைப்பினை எடுத்துரைக்கின்றது. இவ்வகையில்,

**"தன்னைத்தான் போற்றா தொழுகுத னன்கின்னா**
**முன்னை யுரையார் புறமொழிக் கூற்றின்னா**
**நன்மை யிலாளர் தொடர்பின்னா ஆங்கின்னா**
**தொன்மை யுடையார் கெடல்"[13]**

என்ற பாடல் நான்கு சீர்களைப் பெற்று வந்துள்ளன. நாற்பது பாடல்களிலும் நான்கு சீர்கள் அமைந்துள்ளன. இன்னா நாற்பது நான்கு சீர்களைப் பெற்ற அளவடியாக பாடப்பட்டுள்ளன. ஈற்று அடி முச்சீராக இருப்பது வெண்பாவிற்குரிய இலக்கணத்தில் அமைந்துள்ளது புலனாகிறது.

## இன்னா நாற்பதின் தொடை அமைப்புகள்

அடிகளை ஒன்றோடொன்று தொடுப்பது தொடை எனப்படுகின்றது. தொல்காப்பியம் மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை, பொழிப்பு, ஒருஉ, செந்தொடை, நிரனிறுத்தமைத்தல், இரட்டையாப்பு என்ற பத்து வகைத் தொடைகளை 16 நூற்பாக்களில் சுட்டுகிறது. யாப்பிலக்கணம்,

**"மோனை யெதுகை முரணியை யளபெடை**
**எனுமிவை யைந்தும் முதற்றொடை யாமே"[13]**

என்று ஐந்து வகையாக முதற்றொடையை கூறுகின்றது. தொல்காப்பியம் குறிப்பிடுகின்ற பொழிப்பு, ஒரூஉ தொடையுடன் கீழ்கதுவாய், கூழை, முற்று, மேற்கதுவாய், இணையினை விகற்பங்களாக யாப்பிலக்கணம் எடுத்தியம்புகிறது. தொல்காப்பியர் கூறுகின்ற நிரல்நிறுத்தமைத்தல் தொடையை யாப்பு நூல்கள் கூறவில்லை. இரட்டை யாப்பு என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்ற தொடையை யாப்பு நூல்கள் இரட்டைத் தொடை என்று புலப்படுத்துகின்றது.

### மோனை

அடிதோறும் முதலெழுத்து ஒன்றி வருவது மோனை. சீர்தோறும் முதலெழுத்து ஒன்றி வருவது சீர் மோனை.

**"முதலெழுத் தொன்றுதல் மோனை யாகும்'**[15]

என்று யாப்பதிகாரம் மோனைக்கு விளக்கம் தருகிறது. இன்னா நாற்பதில் பதினொராம் பாடலில்,

**"இடனில் சிறியாரோ டியாத்த நண் பின்னா**
**இடங்கழி யாளர் தொடர்பின்னா இன்னா"**[16]

என்ற வரியில், இடனில்-இடங்கழி என்ற சொற்களில் "இ" மோனையாக அமைந்துள்ளது. பதினைந்தாம் பாடலில், "கல்லா ருரைக்குங் கருமப் பொருளின்னா" என்ற வரியில் "க" என்பது பொழிப்பு மோனையாக வந்துள்ளன. பத்தொன்பதாம் பாடலில், "நிலத்திட்ட நல்வித்துநாறாமை யின்னா" அடியில் "நி-ந-நா" என்பது கூழை மோனையாக அமைந்துள்ளன. இதன் வழியாக இன்னா நாற்பதில் மோனைத் தொடை சிறப்புற அமைந்துள்ளதை அறிய முடிகின்றது.

### எதுகை

அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகைத்தொடை. இன்னா நாற்பதில் முதல் பாடலில் "பந்தமில்லாத - தந்தையில்லாத - அந்தணரில் - மந்திரம்" என்று அடிதோறும் உள்ள சொற்களில் 'ந்" அமையப் பெற்று எதுகைத் தொடை இடம் பெற்றுள்ளன. இன்னா நாற்பதில் உள்ள நாற்பது பாடல்கள் எதுகைத் தொடை அமைந்துள்ளது சிறப்பிற்குரியன.

### இயைபு

அடி இறுதி எழுத்துகள் ஒன்றி வருவது இயைபுத் தொடை. இதனை,

**"இறுவா யொத்தல் இயையெனப் படுமே"**[17]

என்று யாப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. இன்னா நாற்பதில் உள்ள நாற்பது பாடல்களிலும் "இன்னா" என்ற சொல் முதல் மூன்றடியின் இறுதியில் வந்து இயைபுத் தொடை நயமிக்க செய்யுட்களாக உள்ளன என்பது தெளிவாகின்றது.

### அடுக்குத்தொடர்

வாக்கியங்களில் பொருளை அழகுபடுத்தவும் தெளிவுபடுத்தவும் அடுக்குத் தொடர் உத வுகிறது. "கொடுத்து விடாமை கவிக்கின்னா இன்னா" என்ற முப்பத்தி ஒன்பதாம் பாடல் வரியில் இன்னா இன்னா என்பது அடுக்குத்தொடராக அமைகின்றன. நாற்பது பாடல்களில் உள்ள ஈற்று அயலடியில் மூன்றாம் சீரும் நான்காம் சீரும் இன்னா இன்னா என அமைகிறது. இன்னா நாற்பதில் அடுக்குத்தொடர் சிறப்பிடம் பெறுகிறது.

### பாவும் ஓசையும்

நான்கு அடிகள் பெற்று தனிச்சொல் இன்றி வருவது இன்னிசை வெண்பா. இன்னா நாற்பது இன்னிசை வெண்பாவால் ஆனது. தொல்காப்பியர்

**"அஃதன் றென்ப வெண்பா யாப்பே'**[18]

என்று அகவலோசை அல்லாத பிற ஓசையினை வெண்பாவிற்குரிய ஓசையாக கூறுகிறார். காரிகை நூல் இதனை செப்பலோசை என்று எடுத்துரைக்கின்றது. இதன் வழியாக இன்னா நாற்பது இன்னிசை வெண்பாவினால் செப்பலோசை பெற்றுள்ளது புலனாகிறது.

## தொகுப்புரை

தமிழின் முந்து நூலான தொல்காப்பிய இலக்கணநூல் எழுத்து, சொல், பொருளுக்கு இலக்கணம் வகுக்கிறது. பொருளதிகாரத்தில் உள்ள செய்யுளியல் செய்யுள் இயற்றுவதற்கான இலக்கண முறையினை எடுத்தியம்புகிறது. பின்னர் அவை யாப்பிலக்கணமாக வளர்ச்சி பெற்றுள்ளன. யாப்பிலக்கண மரபினை செய்யுள் இயற்றுவதற்கு பயன்படுத்தி வருகின்றனர். இயற்றப்பட்ட செய்யுட்களில் உள்ள யாப்பு மரபினை வெளிக்கொண்டு வரும் நோக்கில் இன்னா நாற்பதில் அமைந்துள்ள யாப்பு மரபான எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, பா வகை, ஓசையினை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

யாப்பு மரபுக்கு உட்பட்ட பாக்கள் (செய்யுள்) காலம் கடந்து இன்றளவும் வளமை குன்றாமல் நிலைத்து நிற்கின்றன. இதற்கு காரணம் யாப்பிலக்கண விதியின் அமைப்பு என்பது இக்கட்டுரை வழியாக தெளிவாகப் புலனாகிறது.

## முடிவுரை

பதினெண்கீழ்கணக்கு நூல்களில் ஒன்றான நாற்பது இன்பம் பயவாது துன்பம் பயக்கும் பொருட்கள் இன்னின்ன எனக்கூறும் நாற்பது வெண்பாக்களையுடையது. இன்னா என்ற சொற்களின் மூலம் நூற்றி அறுபது இன்னாத கருத்துகளைக் கூறுகின்றது. இந்நூல் இன்னிசை வெண்பாவால் அமைந்துள்ளது. ஓசை நயத்துடன் இன்னாத கருத்துகளை எடுத்தியம்புகிறது. யாப்பு மரபுக்கு உட்பட்டு இருக்கின்ற இன்னா நாற்பது சிறந்த நயமிக்க செய்யுளாக உள்ளன என்பது புலனாகிறது.

## அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியம் - பொருளதிகாரம், இளம்பூரணனார் (உ.ஆ), நூ.எ.383, பக்கம்-425, சாரதா பதிப்பகம், சென்னை-14, 14ஆம் பதிப்பு-2016.
2. யாப்பருங்கலக் காரிகை - ந.மு.வேங்கடசாமி நாட்டார் (உ.ஆ), பக்கம்-9, சாரதா பதிப்பகம், சென்னை-14, 13ஆம் பதிப்பு-2016.
3. தொல்காப்பியம் - பொருளதிகாரம், இளம்பூரணனார்(உ.ஆ), நூ.எ.312, பக்கம்-396, சாரதா பதிப்பகம், சென்னை-14, 14ஆம் பதிப்பு-2016.
4. தொல்காப்பியம் - பொருளதிகாரம், நூ.எ.313, பக்கம்-397.
5. இனியவை நாற்பது, இன்னா நாற்பது - கோ. இராஜகோபாலப்பிள்ளை, பா.எ.3, ஸ்ரீயசோதா பப்ளிகேஷன், சைதாப்பேட்டை, சென்னை-15, முதல் பதிப்பு-2012.
6. மேலது
7. இன்னா நாற்பது பாடல் எண்8.
8. யாப்பதிகாரம்-புலவர்குழந்தை,நூ.எ.2, பக்கம்-3, சாரதா பதிப்பகம், சென்னை-14, முதல் பதிப்பு-2006.
9. யாப்பிலக்கணம் - புலவர் குழந்தை, பக்கம்-17, இந்திய பண்பாட்டு ஆய்வு மையம், மாங்காடு, சென்னை-122, முதல் பதிப்பு-2017.
10. தொல்காப்பியம் - பொருளதிகாரம், இளம்பூரணனார் (உ.ஆ), நூ.எ.320, பக்கம்-400.
11. யாப்பருங்கலக்காரிகை - ந.மு.வேங்கடசாமி நாட்டார் (உ.ஆ), நூ.எ.12, பக்கம்-34.
12. யாப்பிலக்கணம் - புலவர் குழந்தை, நூ.எ.11 பக்கம்-17.
13. இன்னா நாற்பது பாடல் எண்32.
14. யாப்பிலக்கணம் - புலவர் குழந்தை, நூ.எ.12 பக்கம்-36.
15. யாப்பதிகாரம் - புலவர் குழந்தை, நூ.எ.13, பக்கம்-24.
16. இன்னா நாற்பது பாடல் எண்11.
17. யாப்பதிகாரம் - புலவர் குழந்தை, நூ.எ.16, பக்கம்-25.
18. தொல்காப்பியம் - பொருளதிகாரம், இளம்பூரணனார்(உ.ஆ), நூ.எ.387, பக்கம்-427.